**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், குளித்தலை**

**முன்னிலை:– திருமதி.R.தமிழரசி, B.A.,B.L.,**

**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி, குளித்தலை,**

**2025 ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 03 ம் நாள் புதன்கிழமை**

**I.A.No.02/2025 In O.S.No.79/2025**

லெட்சுமி ... மனுதாரர்/பிரதிவாதி

**//எதிராக//**

வையாபுரி (குடும்ப மேலாளர்) .... எதிர்மனுதாரர்/வாதி

இம்மனு என் முன்பாக 19.08.2025 ஆம் தேதி இறுதியாக விசாரணைக்கு வந்த போது மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.T.இரத்தினம் அவர்கள் முன்னிலையாகியும், எதிர்மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.R.மூர்த்தி அவர்கள் முன்னிலையாகியும், எடுத்துரைத்த வாதங்களை கேட்டும், வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்தும் இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்

**உத்தரவு**

மனுதாரர்/பிரதிவாதிக்கு எதிராக கடந்த 23.06.2025 ம் தேதி பிறப்பிக்கப்பட்ட ஒருதலைபட்ச உத்தரவை ரத்து செய்யக் கோரி உரிமையியல் நடைமுறைச்சட்டம் கட்டளை 9 விதி 7–ன் கீழ் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**மனுதாரர் தரப்பு மனுவின் சுருக்கம்**

1) மனுதாரர் இவ்வழக்கின் 1ம் பிரதிவாதி. இவ்வழக்கில் இருந்து 1ம் பிரதிவாதிக்கு அழைப்பாணை வந்திருந்த போது அவருக்கு உடல்நலம் சரியில்லாமல் இருந்ததால் நீதிமன்றத்தில் ஆஜராக இயலவில்லை என்றும் பின்னிட்டு வழக்கறிஞரை வைத்து பார்த்த போது தனக்கு எதிராக தோன்றாதரப்பினர் உத்தரவாகி வந்தது தெரிய வந்தது என்றும் மேற்படி தவறு வேண்டுமென்றே ஏற்பட்டதல்ல. மன்னிக்கத்தக்கது. எனவே 23.06.2025ல் ஏற்பட்ட ஒரு தலைப்பட்ச உத்தரவை ரத்து செய்ய வேண்டுமென்று கோரி இந்த மனுவை தாக்கல் செய்துள்ளார்.

**எதிர்மனுதாரர் தாக்கல் செய்துள்ள எதிருரையின் சுருக்கம்**

2) மனுவில் கூறியுள்ள சங்கதிகளை மனுதாரரே நிரூபிக்க வேண்டும். மனுதாரர் நீதிமன்றத்தின் அழைப்பாணையை

பெற்றுக்கொண்டு வேண்டுமென்றே நீதிமன்றத்தில் ஆஜராகாமல் விட்டுவிட்டு தற்போது உடல்நிலை சரியில்லாத காரணத்தால் நீதிமன்றத்தில் ஆஜராகவில்லை என்று கூறுவது ஏற்கத்தக்கதல்ல. எனவே இம்மனுவை தள்ளுபடி செய்யப்பட வேண்டுமென எதிருரை தாக்கல் செய்துள்ளார்.

3) தற்போது தீர்மானம் செய்யப்பட வேண்டியது இம்மனு அனுமதிக்கப்படத்தக்கதா? இல்லையா? என்பதே ஆகும்.

**<u>தீர்வு</u>**

4) இருதரப்பு வாதமும் கேட்கப்பட்டது. வழக்கு கோப்புகளை பரிசீலனை செய்கையில், மனுதாரருக்கு நீதிமன்றத்தில் அழைப்பாணை சார்வு செய்யப்பட்டு 23.06.2025 அன்று நீதிமன்றத்தில் ஆஜராகாததால் அவருக்கு எதிராக ஒருதலைப்பட்ச உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. பின்னிட்டு அடுத்து வாய்தாவிலேயே மனுதாரர் இந்த மனுவை தாக்கல் செய்துள்ளார். மனுதாரர் தனக்கு உடல் நலம் சரியில்லாததால் நீதிமன்றத்திற்கு வர இயலவில்லை என்று கூறுவது ஏற்கத்தக்கதாக உள்ளது. மனுதாரருக்கு மீண்டும் ஒரு வாய்ப்பு வழங்கலாம் என இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது. எனவே இந்த மனுவை நிபந்தனையின் பேரில் அனுமதிக்க இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

**முடிவாக,**

இம்மனு நிபந்தனையின் பேரில் அனுமதிக்கப்பட்டு மனுதாரர் எதிர்மனுதாரருக்கு ரூ.500/– செலவுத்தொகையாக 09.09.2025ம் தேதிக்குள் செலுத்த வேண்டுமென்றும், தவறும்பட்சத்தில் இம்மனு தள்ளுபடியாகும் என்றும் உத்தரவிடப்படுகிறது. மீண்டும் அழைக்க 10.09.2025.

இவ்வுத்தரவானது என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் குறிப்பெடுக்கப்பட்டு, கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் படித்து சரிபார்க்கப்பட்டு பிழைகள் திருத்தம் செய்யப்பட்டு இன்று 2025ம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 03ம் நாள் அவையறிய பகரப்பட்டது.

R TAMILARASI

Digitally signed by R TAMILARASI

**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,**
**குளித்தலை.**

**<u>மனுதாரர்கள் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள்</u>**

–இல்லை–

**<u>எதிர்மனுதாரர் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள்</u>**

–இல்லை–

R TAMILARASI Digitally signed by R TAMILARASI

**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,**
**குளித்தலை.**

**********************************

**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்**
**குளித்தலை**

**I.A.No. 02/2025 in O.S.No. 79/2025**

**DRAFT / FAIR ORDER**

**D.D.03.09.2025**

**********************************